**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 29.09.2026

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## AI அடிப்படையிலான கல்வித் தொழில்நுட்பப் புதுமைகளுடன் CII Edu-Tech Expo 2026-ல் COXBIT, TNAU பங்கேற்பு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் Centre of Excellence in Biotechnology (COXBIT), CII Edu-Tech Expo 2026 கண்காட்சியின் 2-ஆம் பதிப்பில் பங்கேற்றது. இந்திய தொழில்துறை கூட்டமைப்பு (CII) சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கண்காட்சி செப்டம்பர் 24 முதல் 26, 2026 வரை சென்னை வர்த்தக மையத்தில், சென்னையில் நடைபெற்றது. "Powering Education with Technology" என்ற கருப்பொருளில் நடைபெற்ற இம்மூன்று நாள் கண்காட்சியில், கல்வி நிறுவனங்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள், புதுமையாளர்கள், தொடக்கநிலை நிறுவனங்கள் (Start-ups), தொழில்துறை பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு துறை சார்ந்த பங்குதாரர்கள் பங்கேற்று, வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை காட்சிப்படுத்தியதுடன், பல்வேறு ஒத்துழைப்பு வாய்ப்புகளையும் ஆராய்ந்தனர்.

COXBIT தனது தொடக்கநிலை நிறுவனங்களுக்கான (Start-up) சூழலமைப்பு மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டு நடவடிக்கைகளை காட்சிப்படுத்தியது. வேளாண்மை, உயிரித் தொழில்நுட்பம், உணவுத் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) சார்ந்த பயன்பாடுகள் உள்ளிட்ட துறைகளில், தொடக்கநிலை நிறுவனங்கள், மாணவர்கள் மற்றும் தொழில்துறையினருக்குத் தேவையான Incubation வசதிகள், ஆய்வக ஆதரவு மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டு வாய்ப்புகளை வழங்கி, ஆராய்ச்சி, புதுமை மற்றும் தொழில்முனைவோரை ஊக்குவித்து வரும் COXBIT-ன் செயல்பாடுகள் இக்கண்காட்சியில் எடுத்துக்காட்டப்பட்டன.

COXBIT-ன் பங்கேற்பின் ஒரு பகுதியாக, COXBIT சூழலமைப்புடன் இணைந்து செயல்படும் செயற்கை நுண்ணறிவு சார்ந்த நிறுவனமான Home Idea Technologies, கல்வி மற்றும் கற்றல் பயன்பாடுகளுக்கான AI அடிப்படையிலான குரல் வழி கல்வித் தீர்வுகளை (AI-based voice-assisted educational solutions) காட்சிப்படுத்தியது.

நிகழ்ச்சியில் உரையாற்றிய தமிழ்நாடு அரசின் மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு. பி. விஸ்வநாதன், தொழில்நுட்பம் மற்றும் வலுவான ஒத்துழைப்பின் மூலம் கல்வி நிறுவனங்களுக்கும் தொழில்துறைக்கும் இடையிலான இணைப்புகளை மேலும் வலுப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். பாடத்திட்ட மேம்பாடு, சிறப்பு அழைப்புப் பேராசிரியர்கள், தொழில்துறை ஆதரவுடன் கூடிய ஆய்வகங்கள், பயிற்சிப் பணிகள் (Internships), தொழில்துறை–கல்வி நிறுவனங்களுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoUs) மற்றும் வேலைவாய்ப்பு சார்ந்த முன்னெடுப்புகள் ஆகியவற்றில் தொழில்துறையின் பங்களிப்பின் முக்கியத்துவத்தையும் அவர் எடுத்துரைத்தார்.

***மக்கள் தொடர்பு அலுவலர்***